

திருநெல்வேலி மாவட்டத்தில் பொருநை அருங்காட்சியகம் திறப்பு விழா, மனிதநேய மகத்துவ கிறிஸ்துமஸ் பெருவிழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொள்வதற்காக திருநெல்வேலி மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் (20.12.2025) வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் - சென்னை கிழக்கு மாவட்டம்

# கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் - கிறிஸ்துமஸ் பெரு விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – 3250 கிறிஸ்துவக் குடும்பங்களுக்கு பரிசுப் பொருள்கள் வழங்கிச் சிறப்பிக்கிறார்!

சென்னை, டிச. 22-

சென்னை கிழக்கு மாவட்டம், திமுக சிறுபான்மை நல உரிமை பிரிவு சார்பில் நாளை - (23/12/2025 செவ்வாய்க் கிழமை) மாலை 4.00 மணி அளவில் சென்னை, பெரம்பூர், (பிருந்தா திரையரங்கம் அருகில்) தொன்போஸ்கோ பள்ளி வளாகத்தில் வளாகத்தில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர்பாபு ஏற்பாட்டில், செயலாளர், கழக சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு சுபேர்கான், தலைவர் கிருஸ்துவ நல் லெண்ண இயக்கம் முனைவர் த.இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ, இ.சி.ஐ.சென்னை பேராயர், இந்திய சுவிசேஷ திருச்சபை டாக் டர் கதிரொளி மாணிக்கம், முதன்மை ஆசி ரியர், அனுவிரதம் மாத இதழ் சென்னை திருமதி. மாலா காத்ரேலா, தரங்கை பேரா யர்/தலைவர், தமிழ் சுவிசேஷ லூட்ததரன் திருச்சபை டாக்டர்.A.கிறிஷ்டியன் சாம்ராஜ், ஆற்காடு லூத்தரன் திருச்சபை பேராயர் திரு.டாக்டர்.D.பீட்டர் பால் தாமஸ், ஆற்காடு லூத்தரன் திருச்சபை பேராயர், ரெக்டார்(ம) தாளாளர் பெரம்பூர் டான்போஸ்கோ பள்ளி அருட்தந்தை திரு.ஜோசப் லியோ ச.ச, பேராயர் சி.எஸ்.ஐ.சென்னை பேராயம் திரு.அ.பால்பிரான்சிஸ் ரவிச்சந்திரன், சிரவை ஆதினம் கௌமார மடாலயம் கோவை திருப்பெருந்திரு இராமானந்த கும ரகுருபர சுவாமிகள், உறுப்பினர் தமிழ் நாடு மாநில சிறுபான்மையினர் ஆணை யர் திருத்தந்தை ஏ.சுவர்ணராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் அன்பின் இனிய கிறிஸ்துமஸ் பெருவிழா 2025ஐ, முதலமைச்சர் அவர்கள் தலைமை ஏற்று 3250 கிறிஸ்துவ சகோதரக் குடும்பங்களுக்கு கிறிஸ்துமஸ் வாழ்த்துக் கள் தெரிவித்து பரிசு பொருட்கள் வழங்கிச் சிறப்புரையாற்றுகின்றார்.

இந்த இனிய விழாவில் இந்த இனிய கிறிஸ்துமஸ் பெருவிழாவில் மேயர் பிரியா ராஜன், டாக்டர்.கலாநிதிவீராசாமி எம்.பி, இரா.கிரிராஜன் எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.எ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, இ.பரந்தா மன்.எம்.எல்.ஏ. ப.ரங்கநாதன், இரா.விடு தலை, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகரா சன், கே.சந்துரு,சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எம்.சி, எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், எஸ். தனசேகர், டி.யோகப்பிரியா, என்.தாவூத் பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலா ளர்கள்: P.ஊமைத்துரை, கே.பி.ஆதவன் மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசே கர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இரா மச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி மற் றும் கழக நிர்வாகிகள், முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

### ‘கலைஞர்’ செய்திகள் தொலைக்காட்சி பிரிவுத் தலைவர் – எழுத்தாளர்

# ப.திருமாவேலன் எழுதிய மூன்று நூல்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - இன்று வெளியிட்டு சிறப்புரையாற்றுகிறார்!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி – நூல்களின் முதற்படிகளைப் பெற்றுக் கொள்கிறார்!

சென்னை, டிச. 22-

**‘கலைஞர் செய்திகள்’ தொலைக் காட்சி பிரிவுத் தலைவர் ப.திருமா வேலன் எழுதிய மூன்று நூல்களை, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளி யிட்டுச் சிறப்புரையாற்றுகிறார்.**

**அந்நூல்களின் முதற்படிகளை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் பெற்றுக் கொண்டு வாழ்த்தி உரையாற்றுகிறார்.**

இவ்வினிய விழா பற்றிய விவரம் வருமாறு:-

‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சிப் பிரிவுத் தலை வரும் எழுத்தாளருமான ப.திரு மாவேலன் - “தீரர்கள் கோட்டம் தி.மு.க.” - “திராவிட அரசியல் - திராவிட அரசு இயல்” - “முறை செய்து காப்பாற்றும் முதலமைச்சர்” ஆகிய மூன்று நூல்களை எழுதியுள்ளார்.

இந்நூல்களின் வெளியீட்டு விழா இன்று (22.12.2025 - திங் கள் கிழமை) மாலை 6.00 மணி அளவில் சென்னை - கோட்டூர்பு ரம் - பேரறிஞர் அண்ணா நூற் றாண்டு நூலக அரங்கில் நடை பெறுகிறது.

இவ்விழாவில் - கழகத் தலை வர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, விழா வுக்குத் தலைமை வகித்து, ப.திரு மாவேலன் எழுதிய மூன்று நூல் களையும் வெளியிட்டுச் சிறப்புரை யாற்றுகிறார்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள், அந்நூல் களைப் பெற்றுக் கொண்டு வாழ்த் துரை வழங்குகிறார்.

மேலும் - ஒன்றிய முன்னாள் அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.யும் வாழ்த்தி உரையாற்று கிறார்.

முன்னதாக - திராவிடர் இயக் கத் தமிழர் பேரவைத் தலைவர் - பேராசிரியர் சுப.வீரபாண்டியன், நூல் அறிமுகவுரையாற்றுகிறார்.

கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் இயக்குநர் பெல்.கு.ராஜன், கவிதா பப்ளிகேஷன்ஸ் சேது சொக்கலிங்கம் உள்ளிட்டோரும் இவ்விழாவில் கலந்து கொள் கிறார்கள்.



# தி.மு.க. இளைஞர் அணி

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

## மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

கழக இளைஞர் அணியின் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், வருகிற 23.12.2025 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் மாநில துணைச் செயலாளர்கள் முன்னிலையில் கிரீன்வேஸ் சாலை, குறிஞ்சி இல்லத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள் : கழக இளைஞர் அணி ஆக்கப் பணிகள்.

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 21.12.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

